# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.94/மா/2025
நாள் 20.11.2025

S.V. உதயகுமார்
நாகர்கோவில் முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
நாகர்கோவில் மாநகராட்சி எதிர் மனுதாரர்

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவரின் 06.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.01.2025 அன்று பெறப்பட்டு 94/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவர் 06.01.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சி ஐந்தாவது வார்டு மாமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றி வரும் நிலையில் 29.11.2024 அன்று நடந்த இயல்பு கூட்டத்தில் பொருள் எண்.60 வரிசை எண்.14ல் வடகிழக்கு பருவமழைக்கு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல கால்வாய்கள் மண் அகற்றும் பணிக்கு ஒப்பந்த புள்ளி கோரியது மாமன்றத்தின் அனுமதிக்கு வரப்பட்டது. இப்பணிகள் ஏற்கனவே முடிவுற்றதாக நாகர்கோவில் மாநகராட்சியின் whatsapp குரூப் Council & Ncmcல் பல புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டது. எனவே பணி முடிவுற்றதை சுட்டிக்காட்டி மாமன்றத்தில் என்னுடைய எதிர்ப்பினை பதிவு செய்திருந்தும் மாமன்றம் இந்த தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது. 29.11.2024 அன்று விவாதிக்கப்பட்ட மாமன்ற இயல்பு கூட்ட பொருளின் நகல், மாமன்றத்தில் வழங்கப்பட்ட எதிர்ப்பு கடிதத்தின் நகல், மாமன்ற அனுமதி வழங்கிய மாமன்ற தீர்மானத்தின் நகல் ஆகியவற்றை இப்புகார் கடிதத்துடன் இணைத்துள்ளேன். பின்னர் 20.12.2024 அன்று நடைபெற்ற இயல்பு கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேச்சரிக்கை நடவடிக்கை எனக் கூறி மாமன்ற பொருள் எண்.50ல் மேற்படி இனம் அனுமதிக்காக வரப்பட்டது பொருளில் பணிகள் செய்யப்பட்ட இட விபரங்கள் பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகை போன்ற விவரங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஏற்கனவே பணி முடிக்கப்பட்டதாகவும் 3 நபர்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்க மேயர் முன் அனுமதி வழங்கி பணி முடிக்கப்பட்டதாக

கூறப்பட்டிருந்தது. இந்த தீர்மானம் தொடர்பாக மாமன்றத்தில் வினாவும் போது ஏற்கனவே 29.11.2024 அன்று வேலை உத்தரவு வழங்க அனுமதி வழங்கப்பட்ட கோப்பு ரத்து செய்யப்பட்டதாகவும் இப்பணி ஏற்கனவே உள்ளூர் விலைப்புள்ளி பெற்று முடிக்கப்பட்டதாக ஆணையாளர் அவர்களால் மாமன்றத்தில் பதில் தெரிவிக்கப்பட்டது. மேயரின் தனிப்பட்ட அதிகாரம் என்பதால் மன்றத்தில் விவாதிக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே இப்பொருளின் மீது என்னுடைய எதிர்ப்பை பதிவு செய்தேன். விலைப்புள்ளியில் குறிப்பிட்ட விலை மதிப்பானது உள்ளூர் விலை மதிப்பை விட மிகவும் கூடுதலாக உள்ளது. 20.12.2024 அன்று விவாதிக்கப்பட்ட மாமன்ற இயல்பு கூட்ட பொருளின் நகல் மாமன்றத்தில் வழங்கப்பட்ட எதிர்ப்பு கடிதத்தின் நகல், மாமன்ற அனுமதி வழங்கிய மாமன்ற தீர்மானத்தின் நகல் ஆகியவற்றை இப்புகார் கடிதத்துடன் இணைத்துள்ளேன்.

மேலே கூறியவாறு நடைபெற்ற நிகழ்வுகள் மூலம் நாகர்கோவில் மாநகராட்சியின் பொறியியல் துறை, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கைக்காக நாகர்கோவில் மாநகராட்சியின் வாகனங்களைக் கொண்டு கால்வாய்களை தூர்வாரி பணிகளை முடித்து விட்டு அதை ஜெங்கின்ஸ் என்கின்ற ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் வழங்கியதாக கோரி அதற்கு செலவு தொகையாக ரூ.19.50 இலட்சம் கையாடல் செய்ய பொறியியல் துறையும், மேயரும் திட்டமிட்டுள்ளனர். ஏற்கனவே பணி முடிக்கப்பட்டதற்கான வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களை மாமன்றத்தில் கூறி எதிர்ப்பு பதிவு செய்தவுடன் பணம் கையாடல் செய்ய திட்டமிட்டது கண்டுபிடிக்கப்பட்டதால் 29.11.2024 மாமன்ற அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்த பணிக்கான கோப்பை ரத்து செய்த விவரத்தினை மாமன்றத்திற்கு தெரியப்படுத்தாமல் புதியதாக ஒரு கோப்பை துவக்கி முன்கூட்டியே விலைப்புள்ளி பெற்றதாகவும் அதற்கு வேலை உத்தரவு வழங்க முன் அனுமதி மேயர் அவர்கள் வழங்கியதாகவும் குறிப்பிட்டு பணி நடைபெற்ற இட விவரங்கள் பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ஆகியவற்றை மாமன்றத்திற்கு தெரிவித்தால் 29.11.2024 அன்று மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்ட கோப்பு என்பது தெரிந்துவிடும் என்பதற்காக வேண்டுமென்றே உள்நோக்கம் கற்பிக்கும் விதமாக பணத்தை கையாடல் செய்யும் எண்ணத்துடன் பொறியியல் துறையும் மேயரும் மறைத்து கையாடல் செய்ய திட்டமிட்டுள்ளனர். தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டப்படி ஒப்பந்தம் ஒளிவு மறைவற்ற முறையில் பெறப்படாமல் ஏதோ மூவரிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முறையாக எந்த பத்திரிக்கையிலும் விளம்பரப்படுத்தப்படவில்லை. எனவே கோப்பு எண்கள்.E1/17427/2024, E1/15695/2024 இவ்விரு கோப்புகளையும் முறையாக ஆய்வு செய்து விலைப்புள்ளி பெறப்பட்ட மூன்று நபர்களின் GST மற்றும் இந்த நிறுவனங்கள் எப்போது ஆரம்பிக்கப்பட்டது, போலி நிறுவனங்களா என்பதை முறையாக ஆய்வு செய்து நாகர்கோவில் மாநகராட்சியின் பொறியியல் துறை அதிகாரிகள், மேயர் மற்றும் ஒப்பந்ததாரர் ஜெங்கின்ஸ் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் அதுவரை வேலை உத்தரவு வழங்கப்பட்ட கோப்பு எண். E1/17427/2024 மீது நாகர்கோவில் மாநகராட்சி எந்த தொகையையும் வழங்காமல் இருக்க தடையாணை பிறப்பிக்க உத்தரவிடவும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். ஜெங்கின்ஸ் ஒப்பந்ததாரர் இந்த நிதியாண்டில் 21 பணிகள் நாகர்கோவில் மாநகராட்சியில் மின்னணு ஒப்பந்தம் மூலம் பெற்றுள்ளார். அவ்வாறு வழங்கப்பட்ட 21 ஒப்பந்த புள்ளிகளில் 20 ஒப்பந்த பணிகளுக்கு போட்டியாக ARK CONSTRUCTION என்கின்ற ஒப்பந்தாரர் ஒப்பந்தம் கேட்டுள்ளார். அதை உறுதிப்படுத்தும் விதமாக அவரால் நாகர்கோவில் மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்ட ஒப்பந்த பணிக்கான மன்ற தீர்மானங்களை கண்டறிந்து அந்தப் பணிகளை அட்டவணைப்படுத்தி அந்த அட்டவணையை தங்களுக்கு சமர்ப்பித்து உள்ளேன். இந்த அட்டவணை மூலம் ஜெங்கின்ஸ் ஒப்பந்ததாரர் டெண்டர் செட்அப் செய்துள்ளார். எனவே இந்த வழக்கு விசாரணையின் போது நாகர்கோவில்

மாநகராட்சியின் பொறியியல் துறையை ஒப்பந்த புள்ளி இணையதளத்தின் MIS அறிக்கையை தங்களுக்கு சமர்ப்பித்து அதை சரி பார்த்து உத்தரவு வழங்குமாறு வேண்டுகிறேன்.

2. 29.11.2024 அன்று நடந்த இயல்பு கூட்டத்தில் பொருள் எண் 60 வரிசை எண்.16ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுமினிய பார்ட்டிஷன் பணி ஆனது ஏற்கனவே நிறைவடைந்து விட்டது. இப்பணியும் ஒப்பந்ததாரர் ஜெங்கின்ஸ்ற்க்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான மன்ற தீர்மானம் மற்றும் புகைப்பட ஆதாரத்தை இப்புகார் கடிதத்துடன் இணைத்துள்ளேன். எனவே ஒப்பந்தம் கோராமல் பணி செய்த குற்றத்திற்காக நாகர்கோவில் மாநகராட்சி பொறியியல் துறையின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

3. மாநகராட்சி முறைகேடுகள் தொடர்பாக உள்ளாட்சி முறை மன்ற நடுவத்திற்கு (Ombudsman) அளிக்கப்பட்ட மனு மீதான விசாரணை நாளான 06.11.2024க்கு பின்னர் மாமன்றத்தில் வைக்கப்பட்ட இனங்களில் தொழில்நுட்ப அனுமதி விவரங்கள் (Technical Sanction Details) இன்றி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. இதனால் பணி விவரங்களை இணையதளம் மூலம் கண்டறியவும், உண்மை நிலையை அறிந்திடவும் இயலாத நிலையில் முறைகேடுகள் தொடர்வதால் பொறியியல் துறைக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 06.10.2025 நாளிட்ட கடித எண் 5632/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 10383/2021/மா.தி3 நாள் 21.09.2024 வடகிழக்கு பருவமழை–2024: நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

1. பருவமழைக்கு முன்னர் எடுக்கப்பட வேண்டிய அவசர கால நடவடிக்கைக்கான திட்டங்கள் பின்வருமாறு:

   அ. நகர வரைபடத்தில் தாழ்வான பகுதிகள் காண்பித்தல் மற்றும் அதற்கான பட்டியல் அட்டவணையில் குறிப்பிடுதல்.

   ஆ. நகர வரைபடத்தில் ஆறுகள் மற்றும் கால்வாய்கள் முக்கிய இணைப்பு சாலைகள் கால்வாயின் இருபுறமும் உள்ளவற்றை குறிப்பிட்டு காண்பித்தல்.

   இ. வெள்ள நிவாரண கூடங்கள் அதனுடைய தொலைபேசி எண்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர் விவரம் தெரிவித்தல்.

   ஈ. ஒவ்வொரு அலுவலருக்கும் பல்வேறு பணிகள் குறித்தும் நிர்ணயிக்கப்பட்ட பொறுப்புகள் குறித்தும் விவரம் தெரிவித்தல்.

   உ. பாதிப்புக்குண்டான இடங்களுக்கு உடனே குறைந்தபட்ச காலத்தில் எடுத்து செல்லக் கூடிய அளவில் தேவையான தளவாடங்கள், கருவிகள், இயந்திரங்கள் போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருத்தல்.

   ஊ. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்புடைய மற்றும் பல்வேறு துறை மாவட்ட அலுவலர்களின் முக்கிய தொலைபேசி எண்கள் பட்டியல் தயார் செய்தல்.

2. வெள்ள நிவாரண குழு.

3. அனைத்து கட்டிடங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள் ஆய்வு மேற்கொள்ளல்.

4. ஏரிகள் குளங்கள் மற்றும் கண்மாய்கள் ஆய்வு மேற்கொள்ளுதல்.

5. மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய்கள் ஆய்வு மேற்கொள்ளுதல்.

    அ. கால்வாய் அடைப்புகள்.

    ஆ. மழைநீர் வடிகால் மூடிகள்.

    இ. மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல்.

    ஈ. மழைநீர் வடிகால் பராமரிக்க தேவையான வழிவகைகள் செய்தல்.

6. பாதாள சாக்கடை திட்ட கால்வாய் மூடிகள்.

7. சாலைகள் ஆய்வு

    அ. போக்குவரத்து பாதிப்பு ஏற்படும் மற்றும் அதிக மழைநீர் தேக்கமாகும் இடங்களை கண்டறிந்து அந்த மண்டலத்தில் உள்ள பகுதிகளை முற்றிலும் உட்கட்டமைப்பு குறைந்த பகுதியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

    ஆ. மழைநீர் தேங்கும் சாலைகளை கண்டறிதல்.

    இ. வாகனப்போக்குவரத்து இல்லா சாலைகளை கண்டறிதல்.

    ஈ. பழுதுகளை சரி செய்ய சாத்தியமாக்கூடிய பகுதிகளை கண்டறிதல்.

    உ. வேகத்தடைகள் பயன்பாடு மற்றும் பழுதடைந்த மின்கம்பிகள் மற்றும் பட்டுப்போன மரங்கள் அப்புறப்படுத்துதல்.

    ஊ. மோசமான சாலைகளின் நிலை கண்டறிதல் மற்றும் எச்சரிக்கை குறியீடுகள் அமைத்தல்.

    எ. சாலைகளில் பாதாள சாக்கடை திட்டம், மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள பள்ளங்கள் தோண்டுவதை தவிர்த்தல்.

    ஏ. பேருந்து செல்லும் சாலைகளில் உள்ள குழிகளை நிரப்புதல்.

    ஐ. கட்டுமான கழிவுகள், சாலைகள், கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால் பகுதிகளில் குவிந்திருப்பதை அகற்றுதல்.

    ஒ. சாலைகளில் திட்டமிடப்படாத வாகனங்கள் நிறுத்தத்தை கண்காணித்தல்.

    ஓ. சாலைகளில் ஆக்கிரமிப்பு அகற்றுதல்.

8. குடிநீர்.

9. தனி நிவாரண உதவி மையங்கள்.

10. பாதிக்கப்பட்ட மக்களை நடமாடும் சுகாதாரக்குழுக்கள் ஆய்வு செய்தல்.

11. நோய்கள் ஏற்படுவதை தடுக்க குப்பை தொட்டிகளில் பிளீச்சிங் பவுடர் தெளித்தல்.

12. புகை மூட்டத்தின் மூலம் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள்.

13. பன்றிகளை கண்காணித்தல்.

14. நீரினால் பரவும் நோய்கள்.

15. சுகாதார நோக்கம் குறித்த செய்தி வெளியிடுதல்.

16. சிறப்பு தொலைபேசி எண்.

17. கட்டுப்பாட்டு அறை

போன்ற மேற்கண்டவாறு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 17 பணிகளை உடன் செய்திட அறிவுறுத்தியவாறு இவ்வலுவலக செயல்முறைகள் ந.க. எண் இ2/20258/2015 நாள் 25.09.2024–இன்படி வடகிழக்கு பருவமழை 2024–இல் பருவமழையினால் ஏற்படும் வெள்ள பாதிப்புகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள இம்மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும் இவ்வலுவலக கோப்பு எண் இ1/15695/2024–இன்படி வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய தாழ்வான பகுதிகளான (Vulnerable Area) மீனாட்சி கார்டன், இரயில்வே காலனி, ஊட்டுவாழ்மடம், பறக்கின்கால் பண்டு, பாறைக்கா மடத்தெரு, ஆசாரிபள்ளம், கலுங்கடி, புளியடி ரோடு, குருகுலம் சாலை, சக்தி கார்டன், சபரி அணை பகுதிகளில் நீர் வழி பாதைகளில் பெருமளவில் தேங்கியுள்ள புல் மற்றும் செடிகளை அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.845 நாள் 25.10.2024–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு உரிய விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.916 நாள் 29.11.2024இன்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி வழங்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வலுவலக கோப்பு எண் இ1/17427/2024–இன்படி வடகிழக்கு பருவமழை நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் மேற்காணும் கடிதம் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் கள ஆய்வின்படி, அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை கண்டறிந்து அப்பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறு பாலங்கள் இவைகளில் தேங்கியுள்ள மண் மற்றும் சகதிகளை அப்புறப்படுத்தி மழைநீர் மிக எளிதாக சென்றிட பணி மேற்கொள்ளுமாறும் இப்பணியினை மேற்கொள்ள தேவையான வாகனங்கள் இம்மாநகராட்சியில் இல்லாததால் பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு உள்ளூர் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய I. ஷீபா, ஜோஸ் லாரி சர்வீஸ், எண்.15/77 வடக்கு தெரு, மேல ஆசாரிபள்ளம் என்ற நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.973 நாள் 20.12.2024–இன்படி பணி செய்திட அனுமதித்து வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் அனைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்10383/2021/மா.தி3, நாள் 21.09.2024 தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள்படியும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கள ஆய்வின் அடிப்படையிலும் முற்றிலும் பொது மக்களின் நலன் கருதியும் உயிர் சேதம் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் விதி மீறல் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை.

எனவே மாண்புமிகு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கூறிய இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்திரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.10.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 12.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"29.11.2024–ல் நடந்த கூட்டத்தில் வடகிழக்கு பருவ மழைக்கு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல கால்வாய்கள் மண் அகற்றும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி வர பெற்றது. ஆனால் அப்பணிகள் ஏற்கனவே 07.09.2024 முதல் 12.09.2024 வரை மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட புகைப்பட ஆதாரம் இணைத்துள்ளேன். முடிவுற்றதாக நாகர்கோவில் மாநகராட்சி Whatapp Group மற்றும் Council & Ncmcல் பல புகைப்படங்கள், வீடியோக்கள் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்ட நிலையில் 29.11.2024 அன்று வேலை உத்தரவு வழங்க அனுமதி வழங்கப்பட்ட கோப்பு ரத்து செய்யப்பட்டதாகவும், இப்பணி ஏற்கனவே உள்ளூர் விலைப்புள்ளி பெற்று முடிக்கப்பட்டதாக நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அவர்களால் மாமன்றத்தில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரும் கோப்பில் விலைப்புள்ளியில் குறிப்பிட்ட விலை மதிப்பானது உள்ளூர் விலை மதிப்பை காட்டிலும் கூடுதலாக இருந்தது. 20.12.2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எனக் கூறி மாமன்ற பொருள் எண்.50–ல் மேற்படி பொருளில் பணிகள் செய்யப்பட்ட விபரங்கள், பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகை போன்ற விவரங்கள் ஏதும் குறிப்பிடாமலும், ஏற்கனவே பணி முடிக்கப்பட்டதாக கூறி 3 நபர்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்க மேயர் முன் அனுமதி வழங்கி பணி முடிக்கப்பட்டதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது முறைகேடான செயலாகும்.

மேற்கண்ட பணிகள் நாகர்கோவில் மாநகராட்சியின் வாகனங்களைக் கொண்டு கால்வாய்களை தூர்வாரி பணிகளை முடித்து விட்டதாகவும், அதனை ஜெங்கின்ஸ் என்கிற ஒப்பந்ததாரருக்கு வழங்கியதாகவும், இதன்மூலம் ரூ.19.50 இலட்சம் கையாடல் செய்ய திட்டமிட்டனர். தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டப்படி ஒப்பந்தம் ஒளிவு மறைவற்ற முறையில் பெறப்படாமல் 3 நபர்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. முறையாக எந்த பத்திரிக்கையிலும் விளம்பரம் செய்யப்படவில்லை. விலைப்புள்ளி பெறப்பட்ட 3 நபர்களின் GSTமற்றும் சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் எப்போது ஆரம்பிக்கப்பட்டது, இந்நிறுவனங்கள் போலி நிறுவனங்களா என்பதை முறையாக கள ஆய்வு செய்தும் சம்மந்தப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சியின் பொறியியல் துறை அதிகாரிகள், மேயர் மற்றும் ஒப்பந்ததாரர் ஜெங்கின்ஸ் ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து வேலை உத்தரவு வழங்கப்பட்ட கோப்பு எண். E1/17427/2024 மீது எந்த வித தொகையையும் வழங்காமல் இருக்க தடையாணை பிறப்பித்து உத்தரவிடுமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஜெங்கின்ஸ் ஒப்பந்ததாரர் நிதியாண்டில் 21 பணிகள் நாகர்கோவில் மாநகராட்சியில் மின்னணு மூலம் ஒப்பந்தம் பெற்றுள்ளார். அவ்வாறு வழங்கப்பட்ட 21 ஒப்பந்தப்புள்ளிகளில் 20 ஒப்பந்த பணிகளுக்கு போட்டியாக ARK CONSTRUCTION என்கிற ஒப்பந்தாரர் ஒப்பந்தம் கேட்டுள்ளார். ஆனால், ஒப்பந்தப்பணிக்கான மாமன்ற தீர்மானங்களை கண்டறிந்ததன்மூலம் ஜெங்கின்ஸ் ஒப்பந்ததாரரை செட்அப் செய்துள்ளது ஊர்ஜிதம் ஆகிறது.

2. நாகர்கோவில் மாநகராட்சியில் அலுமினிய பார்ட்டிஷன் பணி ஏற்கனவே நிறைவடைந்து விட்ட நிலையில் இப்பணி செய்யும் ஒப்பந்ததாரர் ஜெங்கின்ஸ்க்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்தம் கோராமல் பணி செய்த குற்றத்திற்காக நாகர்கோவில் மாநகராட்சி பொறியியல் துறையின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

3. மேலும், பணி விவரங்கள் இணையதளம் மூலம் கண்டறியவும், உண்மை நிலையினை அறிந்திடவும், இயலாத நிலையில் முறைகேடுகள் தொடர்வதால் உரிய குழு அமைத்து அதன் மூலம் மேற்கண்ட முறைகேடுகளை ஆய்வு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட புகார்களை குறித்து 1 முதல் 92 பக்கங்கள் வரை கொண்ட ஆவண புத்தகம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.''.

6. நாகர்கோவில் மாநகராட்சி இளநிலை பொறியாளர் 09.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 17 பணிகளை செய்திட இவ்வலுவலக செயல்முறை கடித நாள் 25.09.2024–ன்படி வட கிழக்கு பருவமழை 2024–ல் ஏற்படும் வெள்ள பாதிப்புகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள நாகர்கோவில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய தாழ்வான பகுதிகளான (Vulnerable Area) மீனாட்சி கார்டன், இரயில்வே காலனி, ஊட்டுவாழ்மடம், பறக்கின்கால் பண்டு, பாறைக்கா மடத்தெரு, ஆசாரி பள்ளம், கலுங்கடி, புளியடி ரோடு, குருகுலம் சாலை, சக்தி கார்டன், சபரி அணை பகுதிகளில் நீர் வழி பாதைகளில் பெருமளவில் தேங்கியுள்ள புல் மற்றும் செடிகளை அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.845 நாள் 25.10.2024–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு உரிய விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.916 நாள் 29.11.2024ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி வழங்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் கள ஆய்வின்படி, நாகர்கோவில் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை கண்டறிந்து மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறு பாலங்களில் தேங்கியுள்ள மண் மற்றும் சகதிகளை அப்புறப்படுத்தி மழைநீர் எளிதாக செல்ல பணி மேற்கொள்ளப்பட்டு இப்பணிக்கு தேவையான வாகனங்கள் இம்மாநகராட்சியில் இல்லாததால் பணியின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு உள்ளூர் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஷீபா, ஜோஸ் லாரி சர்வீஸ், மேல ஆசாரி பள்ளம் என்கிற நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.973 நாள் 20.12.2024–ன்படி பணி செய்திட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் அனைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நாள் 21.09.2024 தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கள ஆய்வின் அடிப்படையிலும் முற்றிலும் பொது மக்களின் நலன் கருதியும் உயிர் சேதம் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் விதி மீறல் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என இம்முறை நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

வடகிழக்கு பருவமழையின் பொழுது மேற்கொள்ளப்பட்ட 21 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளில் 20 ஒப்பந்தப் பணிகளுக்கு ஜெங்கின்ஸ் என்ற ஒப்பந்ததாரரை செட் அப் செய்துள்ளது ஊர்ஜிதம் ஆகிறது என்பதும், நாகர்கோவில் மாநகராட்சியில் அலுமினிய பார்ட்டிஷன் பணி ஏற்கனவே நிறைவடைந்து விட்ட நிலையில் இப்பணி செய்யும் ஒப்பந்ததாரர் ஜெங்கின்ஸ்க்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், ஒப்பந்தம் கோராமல் பணி செய்த குற்றத்திற்காக நாகர்கோவில் மாநகராட்சி பொறியியல் துறையின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரியுள்ளதும், மேலும், பணி விவரங்கள் இணையதளம் மூலம் கண்டறியவும், உண்மை நிலையினை அறிந்திடவும், இயலாத நிலையில் முறைகேடுகள் தொடர்வதால் உரிய குழு அமைத்து அதன் மூலம் மேற்கண்ட முறைகேடுகளை ஆய்வு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உத்தரவிடுமாறு கோரியுள்ளதும் மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 17 பணிகளை செய்திட நாகர்கோவில் மாநகராட்சி அலுவலக செயல்முறை கடித நாள் 25.09.2024–ன்படி வட கிழக்கு பருவமழை 2024–ல் ஏற்படும் வெள்ள பாதிப்புகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள நாகர்கோவில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதும், வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய தாழ்வான பகுதிகளான (Vulnerble Area) மீனாட்சி கார்டன், இரயில்வே காலனி, ஊட்டுவாழ்மடம், பறக்கின்கால் பண்டு, பாறைக்கா மடத்தெரு, ஆசாரி பள்ளம், கலுங்கடி, புளியடி ரோடு, குருகுலம் சாலை, சக்தி கார்டன், சபரி அணை பகுதிகளில் நீர் வழி பாதைகளில் பெருமளவில் வளர்ந்துள்ள புல் மற்றும் செடிகளை அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.845 நாள் 25.10.2024–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு உரிய விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.916 நாள் 29.11.2024ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி வழங்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதும், வடகிழக்கு பருவமழை நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் கள ஆய்வின்படி, நாகர்கோவில் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை கண்டறிந்து மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறு பாலங்களில் தேங்கியுள்ள மண் மற்றும் சகதிகளை அப்புறப்படுத்தி மழைநீர் எளிதாக செல்ல பணி மேற்கொள்ளப்பட்டு இப்பணிக்கு தேவையான வாகனங்கள் இம்மாநகராட்சியில் இல்லாததால் பணியின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு உள்ளூர் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஷீபா, ஜோஸ் லாரி சர்வீஸ், மேல ஆசாரி பள்ளம் என்கிற நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.973 நாள் 20.12.2024–ன்படி பணி செய்திட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி பணிகள் அனைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நாள் 21.09.2024 தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கள ஆய்வின் அடிப்படையிலும் முற்றிலும் பொது மக்களின் நலன் கருதியும் உயிர் சேதம் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டன என்பதும், இதில் விதி மீறல் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்று தெரிவித்திருப்பது நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், நாகர்கோவில் மாநகராட்சியில், வட கிழக்கு பருவமழை 2024–ல் ஏற்படும் வெள்ள பாதிப்புகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் அனைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 10383/2021/மாதி.3, நாள் 21.09.2024–ல்

தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கள ஆய்வின் அடிப்படையிலும் முற்றிலும் பொது மக்களின் நலன் கருதியும் உயிர் சேதம் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டன என்பதும், இதில் விதி மீறல் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்று நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மனுதாரர் நாகர்கோவில் மாநகராட்சியில் 2024–ல் வடகிழக்கு பருவமழைக்கு எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மீதான புகார் தொடர்பாக, வடகிழக்கு பருவமழைக்கு கால்வாய்களில் மண் அகற்றும் பணிக்கு 29.11.2024 அன்று மாமன்ற கூட்ட பொருள் எண் 60 வரிசை எண் 14–ல் உள்ளதும், 20.12.2024 அன்று மாமன்ற பொருள் எண் 50–ல் குறிப்பிட்டுள்ளதும் ஒரே பணி தானா என்பதனை உறுதி செய்து, புகாரில் கூறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நடைமுறை விதி மீறல்கள் உள்ளதா என்றும், அரசுக்கு நிதியிழப்பீடு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கை மூலம் உறுதி செய்து அறிக்கையினை பெற்று, அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. S.V.உதயகுமார்
கதவு எண் 439A, M.S ரோடு,
பார்வதிபுரம்,
நாகர்கோவில்–629 003.

(2) ஆணையர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

21/11/25
செயலாளர்.
21/11/25
10/11

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032